மு.கு.—21.05.93 ஆந் திகதிய 768 ஆம் இலக்க வர்த்தமானியின் பகுதி I : தொகுதி ( II அ ), பகுதி I : தொகுதி (II ஆ), பகுதி II, பகுதி IV (அ), பகுதி IV (ஆ) ஆகியவற்றில் விளம்பரங்கள் பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 769 –1993 මැයි මස 28 වැනි සිකුරාදා – 1993.05.28

769 ஆம் இலக்கம் - 1993 ஆம் ஆண்டு மே மாதம் 28 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும். | — |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | — |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 140 |
| மாகாண சபைகளின் நானாவித அறிவித்தல்கள் | — |
| பதவிகள் - வெற்றிடம் | — |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | — |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | — |
| நானாவித அறிவித்தல்கள் | — |


வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான "அறிவித்தல்" களுக்குக் கவனம் கோரப்படுகின்றது.

வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள் **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.** வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏல விற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செல்வாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.

வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவித்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்** இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 1993, யூன் 03 ஆந் தேதி வியாழக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 1993, மே 21 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.

நெவில் நாணயக்கார,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
1993 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் தேதி.

# மாகாண சபை அறிவித்தல்கள்

எனது இல. : ம.மா.ச/ஏ/12/90 (xviii).

## மத்திய மாகாண சபை

கீழ்க்குறிப்பிடப்படும் நியதிச் சட்டம், 1992 திசெம்பர் 22 ஆம் திகதி நடைபெற்ற மத்திய மாகாண சபையின் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதோடு, இல. ஜீ. சீ. பி/ஏஎஸ்/03 உம் 1993.3.8 ஆம் திகதியும் கொண்ட கடிதத்தின்படி அதற்கு மத்திய மாகாண கௌரவ ஆளுநருடைய அங்கீகாரம் கிடைத்துள்ளது என இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பீ. ஆர். ரணசிங்க,
சபைச் செயலாளர்,
மத்திய மாகாண சபை.

சபைச் செயலகம் - மத்திய மாகாண சபை,
த. பெட்டி 92,
பள்ளேகளை,
குண்டசாலை,
1993, ஏப்பிறல் 23.

## மத்திய மாகாண சபை

### வீதிப்பிரயாணிகள் போக்குவரத்துச்சேவை நியதிச்சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் சாசனத்தின் 9 ஆம் உப அட்டவணையின் 1 ஆம் பட்டியலில் 8 ஆம் பந்தியிலுள்ளபடி மாகாணத்தின் உள்ளேயிருந்து முதலில் ஆரம்பமாகின்ற வீதிப்பயணிகள் போக்குவரத்து சேவையினை முறையாக நடத்தி செல்வதற்குரிய சேவைகளை வழங்குவதற்காகவும் தொடர்புகளை ஏற்படுத்துவதற்காகவும் மாகாண சபைக்கு அதிகாரமளிக்கும் கட்டளை விதிப்பிரமாணங்களை ஆக்குவதற்கான நியதிச்சட்டம் இதுவாகும்.

மத்திய மாகாண சபையினால் இவ்வாறு பிறப்பிக்கப்படுகிறது :

சுருக்கப் பெயர்.

1. இந்த நியதிச்சட்டமானது 1992 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கம் கொண்ட "மத்திய மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்துச்சேவைகள் நியதிச்சட்டம்" என்று அறிமுகப்படுத்தப்படும்.

நியதிச் சட்டத்தின் பரிபாலனம்.

2. (1) இந்நியதிச்சட்டத்தின் அலுவல்களுக்காக இதன் பின்னர் "பணிப்பாளர்" என்று அறிமுகப்படுத்தப்படுகின்ற போக்குவரத்து பணிகள் சம்பந்தமாக மாகாணப் பணிப்பாளர் ஒருவர் நியமிக்கப்படுவதோடு, இந்த நியதிச்சட்டத்தின் பொது நிர்வாகப்பணிகள் அவருக்கு ஆற்றுப்படுத்தப்படும். மேலும் இந்நியதிச்சட்டத்தின் விதிப்பிரமாணங்களை அமுலாக்குதலுக்கும் அதிகாரமுடையதாக்குதலுக்கும் அவசியமாகின்ற மாகாண போக்குவரத்து பிரதி உதவிப் பணிப்பாளர்களும் வேறு அதிகாரிகளும் தேவைக்கேற்ற அளவில் நியமிக்கலாம்.

(2) இந்நியதிச்சட்டத்தின் கீழ் பணிப்பாளரின் ஏதேனும் அதிகாரங்களை, கடமைகளை, பணிகளை அமுலாக்க அல்லது நிறைவேற்ற, பணிப்பாளரின் கட்டளைகளின்படி மாகாண உதவிப் பணிப்பாளர் எவராயினும், அல்லது மாகாணப் பணிப்பாளரின் கையொப்பத்துடன் எழுத்திலான அதிகாரம் வழங்கப்பட்ட வேறெவராயினும் அதிகாரியொருவரினால் முடியுமாதல் வேண்டும்.

(3) அமைச்சரின் பொது மேற்பார்வையின் நிர்வாகத்தின் கீழ் மாகாணப் பணிப்பாளரும் அவரிடமிருந்து அதிகாரமளிக்கப்பெற்ற அதிகாரிகளும் இந்த நியதிச்சட்டத்தில் உள்ள கட்டளைப் பிரமாணங்களையும் பிறப்பிக்கப்படுகின்ற ஒழுங்குவிதிகளையும் அமுலாக்க வேண்டும்.

பிரயாணிகளின் போக்குவரத்துக்காக கிரமமான சேவைக்கு பிரயாணிகள் போக்குவரத்து சேவைக்கான அனுமதிப்பத்திரம்.

3. (1) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் பணிப்பாளரினால் பிறப்பிக்கப்பட்ட, தற்காலத்தில் செல்லுப்படியாகவிருக்கும் - பிரயாணிகள் போக்குவரத்து அனுமதிப்பத்திரத்தின் மீதான அதிகாரத்தினாலன்றி, இந்த நியதிச்சட்டம் வலுவுடையதாகின்ற திகதியன்றோ அதன் பின்னரோ எவரொருவரினாலும், இதன் (2) ஆம் உப வாசகத்தின் கட்டளைப் பிரமாணங்களின்படியல்லாது கட்டணத்துக்காகவோ நன்கொடைக்காகவோ, பிரயாணிகளின் போக்குவரத்துக்காக, மாகாணத்திலுள்ளேயிருந்து முதலில் தொடங்குகின்ற, கிரமமான சேவையில் ஈடுபடுத்தப்படுகின்ற பஸ் வண்டியை ஓடவிடுதல் ஆகாததாகும்.

(2) 1990 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க மத்திய மாகாண வீதிப்பிரயாணிகள் போக்குவரத்துச் சேவைகள் நியதிச்சட்ட கட்டளை விதிகளின் கீழ் விநியோகிக்கப்பட்ட அல்லது மேற்படி நியதிச்சட்டத்தின் கீழ் பிரயாணிகள் போக்குவரத்துச் சேவைகள் அனுமதிப்பத்திரமாக கணிக்கப்பட்ட. இந்த நியதிச்சட்டம். வலுவுடையதாகின்ற திகதியன்று அல்லது அதன் பின்னர் செல்லுபடியாகக்கூடிய பிரயாணிகள் போக்குவரத்துச் சேவைக்கான அனுமதிப்பத்திரமானது. அதில் குறிப்பிடப்பட்ட செல்லுபடியாகக்கூடிய காலத்திற்குள் இந்த நியதிச்சட்டத்தின் கீழ் விடுக்கப்பட்ட பிரயாணிகள் போக்குவரத்துச் சேவைக்கான அனுமதிப்பத்திரமாக கணித்தல் வேண்டும்.

(3) எந்த ஒரு நபராயினும் இந்த நியதிச்சட்டம் வலுவுடையதாகின்ற தினத்தன்றோ அதன் பின்னரோ வெவ்வேறு கட்டணமோ நன்கொடையோ கருதி பிரயாணிகள் போக்குவரத்துக்கு கிரமமான சேவைக்கு பஸ் வண்டியல்லாத வேறு வண்டி (வாகனம்) ஒன்றையேனும் ஈடுபடுத்தலாகாது.

(4) பணிப்பாளரினாலோ (2) ஆம் வாசகத்தின் கீழ் அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட எவரேனுமொரு நபராலோ எவரேனும் பொலிஸ் அதிகாரியினாலோ. இந்த நியதிச்சட்டத்தின்படி அல்லது இதன் கீழ்வரும் கட்டளை விதிகளின்படி பிரமாணங்களை மீறி பிரயாணிகள் போக்குவரத்துக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள எந்த ஒரு வாகனத்தையும், தடைசெய்ய தத்துவம் இருப்பதோடு. அவ்வாறு தடை செய்யப்பட்ட இடமானது எந்த மஜிஸ்ட்ரேட் நீதிமன்ற அதிகாரத்துக்குட்பட்டதோ அந்த மஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்தில் எவ்வித தாமதமுமின்றி மேற்படி வாகனத்தை ஒப்படைக்க அல்லது ஒப்படைப்பதற்கேற்ற நடவடிக்கைகளையெடுக்க ஒழுங்குகளை மேற்கொள்ளல் வேண்டும்.

(5) ஏதேனுமொரு வாகனம் 4 ஆம் உப வாசகத்தின் கீழ் மஜிஸ்ட்ரேட் நீதிமன்றத்துக்கு ஆட்படுத்தும் சந்தர்ப்பத்தில் அந்த மஜிஸ்ட்ரேட் நீதவானால் மேற்படி வழக்கின் விசாரணை முடிவடையும்வரை மேற்படி வாகனத்தை தடுத்து வைக்க, சந்தர்ப்பத்துக்கேற்றவாறு மஜிஸ்ட்ரேட் நீதவான் விதிக்கின்ற நிபந்தனைகளுக்குட் படுத்தி மேற்படி வாகனத்தை விடுவிக்க கட்டளை பிறப்பிக்கப்படலாம்.

*வருமான அனுமதிப் பத்திரமும் மட்டுப்படுத்தப்படாத காப்புறுதியும் பெறுதல்.*

4. (1) திருத்தப்பட்டவாறான மோட்டார் போக்குவரத்து மசோதாவின் 28 ஆம் வாசகத்தின்படி, இதற்கு மாறாக என்ன குறிப்பிடப்பட்டிருப்பினும் இந்த நியதிச்சட்டத்தின்படி விடுக்கப்படுகின்ற கிரமமான பிரயாணிகள் போக்குவரத்து சேவைகளுக்கான அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக பஸ் வண்டியின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளரால் பஸ் வண்டிக்குரிய செல்லுபடியாகக்கூடிய வருமான அத்தாட்சிப் பத்திரம் பெற்றுக்கொள்ளல் வேண்டும். (அனுமதிப்பத்திரம் என அழைக்கப்படும்)

(2) இந்த நியதிச்சட்டத்தின்படி ஒழுங்கு முறையான பிரயாணிகள் போக்குவரத்துச் சேவைக்கான அனுமதிப்பத்திரத்துக்காக பஸ் வண்டியின் பதிவு பெற்ற உரிமையாளரால் தனது பெயரில் மேற்படி பஸ்வண்டிக்காக மூன்றாம் கட்சியினர் இடர்களுக்கு பொறுப்பாளிகள் என்பதற்கு செல்லுபடியாகக்கூடிய மட்டுப்படுத்தப்படாத காப்புறுதி இருக்கின்றது என்பதற்கு சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

*பிரயாணிகள் போக்குவரத்து பஸ்வண்டிக்கான உரிமை.*

5. (1) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற ஒழுங்கு முறையிலான பிரயாணிகள் போக்குவரத்து சேவைகள் அனுமதிப்பத்திரம் வாயிலாக அதிலடங்கியுள்ள நிபந்தனைகளுக்கமைய வீதியிலோ வீதிகளிலோ பிரயாணிகள் போக்குவரத்துக்காக ஒழுங்கு முறையான சேவையொன்றை நடத்துவதற்குரிய அனுமதிப்பத்திரத்துக்கு உரித்துடையோர் பதிவு பெற்ற உரிமையாளராகும் பட்சத்தில் தனது பஸ் வண்டியை சேவையிலீடுபடுத்த அனுமதிப் பத்திரத்தைப் பெற்றவர் உரிமையுடையவராகிறார்.

(2) எந்தவொரு பஸ் வண்டிக்கேனும் அதன் பதிவுபெற்ற உரிமையாளரல்லாத ஒரு நபரின் பெயரில் ஒழுங்கு முறையான வீதிப்பிரயாணிகள் போக்குவரத்துச் சேவைக்காக இந்த நியதிச்சட்டத்தின் கீழ் பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையனுமதிப் பத்திரம் வழங்கப்படாதிருத்தல் வேண்டும்.

(3) (அ) எந்தவொரு பஸ் வண்டிக்காகவேனும் வீதிப்பிரயாணிகள் போக்குவரத்துக்காக செல்லுபடியாகக்கூடிய அனுமதிப்பத்திரம் ஒன்றுக்குமேல் ஒரே பஸ்வண்டிக்காக பெற்றுக்கொள்ளல் கூடாது.

(ஆ) ஏற்கனவே குறிப்பிட்ட பஸ் வண்டிக்கு பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரம் ரத்து செய்யப் பட்டிருக்கும் வேளையில் 3 (அ) பிரிவு செல்லுபடியாகாது.

(இ) (அ) பிரிவுக்கு மாறாக செயல்படுவோர் இந்நியதிச்சட்டத்தின்படி குற்றமிழைத்தவராவார்.

*பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையனுமதிப் பத்திரத்துக்கு விண்ணப்பித்தல்.*

6. (1) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் ஒழுங்கு முறையான வீதிப்பிரயாணிகள் போக்குவரத்துச்சேவைக்காக அனுமதிப்பத்திரம் பெறுவதற்கான சகல விண்ணப்பங்களும் உரிய மாதிரிப்படிவத்திலமைந்ததாக இருக்க வேண்டியுள்ளதோடு, அது சம்பந்தப்பட்ட பஸ் வண்டியின், வண்டிகளின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர்களால் கையொப்பம் இடப்பட்டு பணிப்பாளருக்கு அனுப்பப்படல் வேண்டும்.

(2) பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையனுமதிப்பத்திரத்துக்காக விண்ணப்பிக்கும் சகல விண்ணப்பதாரிகளும் மேலே (1) ஆம் உப வாசகத்தின்படி சமர்ப்பிக்கின்ற தமது விண்ணப்பப்பத்திரத்துடன் அதற்குரிய பின்வரும் விபரங்களையும் தனது கையொப்பமிட்டு ஒப்படைத்தல் வேண்டும் :–

(i) விண்ணப்பத்திற்குரிய பஸ் வண்டியின் பதிவு இலக்கம், ஆசனங்களின் எண்ணிக்கை, உட்புற உயரத்தின் அளவு.

(ii) வெவ்வேறு கட்டணங்களின்படி பிரயாணிகள் போக்குவரத்துச் சேவைக்காக பஸ் வண்டியை/ பஸ் வண்டிகளை ஈடுபடுத்த விரும்பும் வீதியின் முதலில் ஆரம்பமாகின்ற இடம், வழி நடுவில் இருக்கும் முக்கிய தரிப்பிடங்கள், பிரயாணம் முடிவாகின்ற இடம், வீதியிலக்கம், வீதியின் (அண்ணளவு) தூரம்.

(iii) இதன் 7 ஆம் வாசகத்தின்படி தமது விருப்பத்தை செயல்படுத்தும் நோக்கத்துக்காக பணிப்பாளர் கோருகின்ற ஏனைய விபரங்கள்.

பிரயாணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப் பத்திரத்துக்கான விண்ணப்பம்

7. (1) இங்கு கீழே 2 ஆம் உபவாசகத்தின் கட்டளை விதிகளுக்கு உட்பட்டதாக பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையனுமதிப்பத்திரத்தையோ, அவ்வாறான அனுமதிப்பத்திரம் ஒன்றை புதுப்பிக்கவோ, வழங்கவோ, வழங்காது நிராகரிக்கவோ கூடிய முழு அதிகாரமும் தற்றுணிபும் பணிப்பாளருக்கு இருத்தல் வேண்டும்.

சம்பந்தமாக பொருத்தமானதை செய்தல்.

(2) பிரயாணிகள் போக்குவரத்து சேவையனுமதிப்பத்திரமோ அவ்வாறான அனுமதிப்பத்திரமொன்றை புதுப்பித்தல், வழங்குதல், வழங்காது விடுதல் சம்பந்தமாகவும் அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகின்ற, மாற்றப்படுகின்ற ஏதேனுமொரு வீதி அல்லது வீதிகள் சம்பந்தமாகவும் தற்றுணிபின்படி செயல்படும் போது பணிப்பாளரால் வெவ்வேறு கட்டணங்களுக்காகவோ நன்கொடைகளுக்காகவோ பிரயாணிகள் போக்குகவரத்து வசதிகள் தேவைப்படுகின்ற, வசதிகளை ஏற்படுத்துகின்ற நபர்களுடைய நலன்களையும் உள்ளடக்கி பொதுவாக பொதுமக்களுடைய நன்மைகளைக் கருதுகின்ற அடிப்படையில் கவனம் செலுத்த வேண்டியுள்ளதோடு தமது தற்றுணிபுக்கேற்ப செய்யல்படும் போது பின்வரும் காரணிகள் சம்பந்தமாக விசேட கவனம் செலுத்த வேண்டும்.

(i) உத்தேச பிரயாணிகள் போக்குவரத்துச் சேவை பொது மக்களின் நலன் கருதி எந்த அளவுக்கு ஏற்புடையது, அவசியமானது என்கின்றமை.

(ii) உத்தேச வீதியின் அல்லது வீதிகளின் யோக்கியாம்சதன்மை பற்றிய தகைமைகள்

(iii) உத்தேச வீதியில் அல்லது வீதிகளில் அல்லது அவ்வாறான வேறேதேனும் வீதிகளில் பிரயாணிகளின் போக்குவரத்துச் சேவை தற்போது எந்தளவிற்கு வழங்கப்பட்டு வருகிறது என்கின்றமை.

(iv) (போதுமான, பொருத்தமான செயல் திறன் மிக்க சேவைகளை வழங்குதல் உட்பட) வாகனப் போக்குவரத்துக்கு ஏற்புடைய பிரதேசத்தை முழுமையாக எடுத்தால் அங்கத்தைய தேவைகள், புகையிரத பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையுட்பட, சகல பிரயாணிகள் போக்குவரத்து விதிமுறைகளையும் தொடர்புபடுத்தல் என்கின்றமை.

(v) ஏதேனுமொரு பிரதேசத்திலோ ஏதேனுமொரு வீதியிலோ சம்பந்தப்பட்ட பொது மக்களுடைய போக்குவரத்துத் தேவைகளை நியாயமான கட்டணத்திற்குள் நிறைவுசெய்து கொள்ளக்கூடிய திருப்திகரமானதும் செயல்திறன் மிக்கதுமான போக்குவரத்து வசதிகள் ( புகையிரதத்தினால் வழங்கப்படுகின்ற வசதிகளும் உட்பட) வழங்கப்படுகின்றது என்பது பணிப்பாளரின் அபிப்பிராயமாக அமையுமானால் அந்தச் சேவைகளுக்குப் போட்டியாக அமையும் வகையில் அந்தப் பிரதேசத்திலேயே அந்த வீதியிலேயே பிரயாணிகள் போக்குவரத்துச் சேவைக்கு அங்கீகாரமளித்து அனுமதிப்பத்திரம் வழங்குதல் சாதகம், சாதகம் அற்றது என்கின்றமை.

பிரயாணிகள் போக்குவரத்து சேவையனுமதிப் பத்திரம் செல்லுபடியாகக் கூடிய காலவரம்பு.

8. (1) எவரேனுமொரு நபரால் உரிய கட்டணமோ, கட்டணங்களோ செலுத்தப்பட்டாலும் ஏனைய தேவைப்படுகின்றவை பூரணப்படுத்தப்பட்டாலுமன்றி பணிப்பாளரினால் இந்த நியதிச் சட்டத்தின் கீழ் அந்நபருக்கு பிரயாணிகள் போக்குவரத்துச்சேவை அனுமதிப்பத்திரம் வழங்கப்படலாகாது.

(2) சகல பிரயாணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப்பத்திரமும்.

(i) உரிய மாதிரிப்படிவத்திற்கு அமையவே இருத்தல் வேண்டும் ;

(ii) முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலொழிய அது வழங்கப்பட்ட திகதியிலிருந்து 12 மாதத்திற்கு செல்லுபடியாகக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

**பிரயாணிகளின் நலனையும் ஏற்புடைய காரணிகளையும் பற்றி பிரயாணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதிப் பத்திரத்தில் உள்ளடக்க வேண்டிய நிபந்தனைகள்.**

9. இந்த நியதிச் சட்டத்தின் கட்டளை விதிப்பிரமாணங்களுக்கமையவும் அதன் கீழ் ஆக்கப்படுகின்ற கட்டளை விதிகளுக்கமையவும், இந்த நியதிச் சட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்ற சகல பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையனுமதிப்பத்திரமும் பொது மக்களின் பாதுகாப்பு சேமநலன் வசதிகள் வழங்குவதற்காக பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படுகின்ற நிபந்தனைகள் உள்ளடக்கப்பட வேண்டும். அந்நிபந்தனைகளும் -

(i) பிரயாணிகளிடமிருந்து அறவிடப்படும் பிரயாணிக்கட்டணம், அனுமதிப்பத்திரம் பெறக்கோரும் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படல் வேண்டும்.

(ii) பணிப்பாளரினால் வேறொரு வகையில் உத்தரவு இடப்பட்டால் தவிர அனுமதிப் பத்திரத்தின்கீழ் ஓடவிடப்படுகின்ற பஸ் வண்டியை அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்ட வழியில் அல்லது வழிகளில் மட்டுமே வழிப்பிராயணிகளை ஏற்றிச் செல்ல வேண்டும் என்பதற்கும் ;

(iii) நியமிக்கப்பட்டிருக்கும் போது பஸ் வண்டி ஓட்டம் பதிவு செய்யப்பட்ட குறிப்பிலும் பிரயாணக்கட்டண அட்டவணைப் பிரதியும் பணிப்பாளரினால் உத்தரவிடப்படுகின்ற பிற அனுமதிப்பத்திர அதிகாரத்தின்கீழ் பயன்படுத்தப்படுகின்ற பஸ் வண்டியில் கொண்டு செல்ல வேண்டுமென்றும் பஸ்ஸுக்குள் விளம்பரப்படுத்தி இருக்க வேண்டும் என்பதற்கும் ;

(iv) அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின் கீழ் ஈடுபடுத்தப்படுகின்ற பஸ்வண்டி சகல சந்தர்ப்பங்களிலும் தொழில்நுட்ப பொருத்தப்பாடுடன், வீதிப் போக்குவரத்துக்கு உசிதமான நிலையில் பராமரிக்கப்படுதல் வேண்டும் என்பதற்கும் ;

(v) அனுமதிப்பத்திர அதிகாரத்தின்கீழ் ஈடுபடுத்தப்படுகின்ற பஸ் வண்டியில் கடமையாற்றுகின்ற நடத்துனரோ நடத்துனருடைய காரியங்களை நிறைவேற்றுகின்ற எவரேனுமொருவரால் ஒவ்வொரு பிரயாணியிடமிருந்து பெறப்படுகின்ற பஸ் கட்டணத்துக்குரிய கட்டணத்தையும் பிரயாணியில் பிரயாணம் தொடங்குகின்ற இடமும் முடிகின்ற இடமும் தெளிவாக குறிப்பிடப்பட்ட மேற்படி பஸ்ஸின் பதிவிலக்கத்துடனான பிரயாணச் சீட்டொன்று ஒவ்வொரு பிரயாணிக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதற்கும் ;

(vi) அனுமதிப்பத்திரத்தினால் அனுமதிக்கப்பட்டுள்ள பிரயாணிகள் எண்ணிக்கைக்கு கூடுதலான எண்ணிக்கையுடையோரை அனுமதிப்பத்திரத்தின்கீழ் ஈடுபடுத்தப்படும் பஸ் வண்டியில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போக்குவரத்திற்கு ஈடுபடுத்தக்கூடாது என்பதற்கும் ;

(vii) அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் ஈடுபடுத்தப்பட்டுள்ள பஸ் வண்டியை ஓடவிடும் பொழுது எந்தவொரு சந்தர்ப்பத்திலேனும் பிரயாணத்தின் முடிவிடத்திற்கு முன்னரோ பஸ் வண்டி பழுதடைந்து விட்டாலோ, பஸ் வண்டி இயக்குனரோ அதன் ஓட்டுனரின் தவறினால் பிரயாணத்துக்கு இடைஞ்சல் ஏற்படுமிடத்து பிரயாணிகள் தங்களது பிரயாண முடிவிடத்தை அடைவதற்கு மாற்றேற்பாடுகள் செய்யப்படல் வேண்டும்.

**அனுமதிப்பத்திரம் பெற்ற பஸ் வண்டியை குறிப்பிட்டுக் காட்டுதல்.**

10. பணிப்பாளரால் இந்நியதிச் சட்டத்தின்கீழ் பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையனுமதி பத்திரம் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் குறிப்பிட்ட சேவையிலீடுபடுத்த அதிகாரம் வழங்கப்படுகின்ற பஸ் வண்டியை அடையாளம் காட்டும் இலக்கமும் பணிப்பாளர் தேவை எனக் கருதுகின்ற பிற விபரங்களும் அந்த அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடுவதன்மூலம் மேற்படி பஸ் வண்டியை திட்டவட்டமாக குறிப்பிட்டுக்காட்டுதல் வேண்டும்.

**உத்தரவுகளை பிறப்பிப்பதற்கு பணிப்பாளருக்கு உள்ள அதிகாரம்.**

11. இந்த நியதிச் சட்டத்தின்கீழ் பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையனுமதிப்பத்திரம் வழங்கப்பட்ட எந்தவொரு நபரும் இந்த நியதிச்சட்டத்தின் கட்டளை விதிகளையோ அதன்கீழ் ஆக்கப்படுகின்ற விதிமுறைப் பிரமாணங்களையோ பின்பற்றுவதனை கண்காணிப்பதற்கு தேவையென தான் கருதுகின்ற கட்டளைகளை பணிப்பாளரினால் அவருக்கு பிறப்பிக்க தத்துவம் இருப்பதோடு அந்த கட்டளைகளை பெற்ற நபரால் மேற்படி கட்டளைகளில் பெற்ற நபரால், மேற்படி கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் அவற்றைப் பின்பற்றப்படுதல் வேண்டும்.

**அனுமதிப்பத்திரத்தை மாற்ற முடியாத தன்மை.**

12. இந்த நியதிச்சட்டத்தின்கீழ் எவரேனும் ஒரு நபருக்கு வழங்கப்பட்ட பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையனுமதிப்பத்திரத்தை பிறிதொரு நபருக்கு ஒப்படைக்க முடியாது என்பதோடு அத்தகைய ஒப்படைப்பு வெறுமையானதும் வலுவற்றதுமாகும்.

**அனுமதிப்பத்திரத்தின் உரித்தாளி விபரங்கள் சம்பந்தமான மாற்றங்களை அறிவித்தல் வேண்டும் என்பது.**

13. பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையனுமதி பத்திரமொன்றிற்கான விண்ணப்பப்பத்திரத்தில் அல்லது அதனோடு தொடர்புடைய அனுமதிப்பத்திர உரித்தாளியினால் குறிப்பிடப்பட்ட விபரங்களில் ஏதேனும் மாற்றங்கள் ஏற்பட்ட திகதியிலிருந்து 14 நாட்களுக்குள்ளாக அந்த அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பவரால் அதைப்பற்றி எழுத்துமூலமாக பணிப்பாளருக்கு அறிவித்து, மாற்றத்தைப் பற்றி அவரது தீர்மானத்தையும் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

ශ්‍රී ලංකා ජාතික පුස්තකාලය

வீதிப் பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையனுமதிப் பத்திரம் புதுப்பித்தல்.

14. இந்த நியதிச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பிரயாணிகள் போக்குவரத்துச் சேவை அனுமதி பத்திரமொன்றை வைத்திருப்பவர் அதனை புதுப்பிப்பதற்காக பணிப்பாளருக்கு அனுப்பும் சந்தர்ப்பத்தில் -

(i) அந்த நியதிச்சட்டத்தின் விதிப்பிரமாணங்களுக்கு அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட உத்தரவு விதிகளுக்கமைய செயல்பட்டுள்ளார் என்பதற்கும்.

(ii) இந்தச் சட்டத்தின் கீழோ அதன்கீழ் ஆக்கப்பட்ட உத்தரவு விதிகளின்கீழ் ஏதேனும் குற்றத்துக்கு ஆளாகவில்லை என்பதற்கும்.

(iii) வீதி அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர் அந்த அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்காக உரிய கட்டணத்தை செலுத்துவதற்கும் ஏனைய தேவைகளை பூரணப்படுத்துவார் என்பதற்கும்.

பணிப்பாளர் திருப்தியடையும் பட்சத்தில் அவரால் அந்த அனுமதிப்பத்திரத்தின் செல்லு படியாகக்கூடிய காலம் முடிவடையும் திகதியிலிருந்து அடுத்துவரும் ஓராண்டு காலத்துக்கு அல்லது அதனைவிட குறைந்த காலத்துக்கு அந்த அனுமதிப்பத்திரத்தை புதுப்பிக்க முடியும்.

அனுமதிப்பத்திரம் ஒன்றை இரத்துச் செய்தல்.

15. பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையனுமதிப் பத்திரமொன்றை வைத்திருப்பவர் –

(i) இந்த நியதிச் சட்டத்தின் ஏதேனும் விதிப் பிரமாணங்களையோ அதன்கீழ் ஆக்கப்பெற்ற ஏதேனும் உத்தரவுகளையோ மீறி இருப்பதாகவும்/ இருப்பதாகவோ,

(ii) இந்த நியதிச் சட்டத்தின் 11 ஆம் வாசகத்தின்கீழ் அனுமதிப்பத்திரத்திற்குரியவருக்கு விடுக்கப் பட்டுள்ள ஏதேனும் உத்தரவுகளை பின்பற்றவில்லையன்றும்/ வில்லையென்றோ,

(iii) இந்த நியதிச் சட்டத்தின்கீழ் அனுமதிப்பத்திரத்திற்குரியவரால் அனுப்பப்பட்ட ஏதேனுமொரு விண்ணப்பப்பத்திரத்திலோ தவணையறிக்கையிலோ, எழுப்பப்பட்ட தகவல்களிலோ, எழுதிய விடயங்களை விவரிக்கையிலோ அவர் அறிய உண்மைக்குப் புறம்பான அல்லது பிழையான விபரங்கள் தரப்பட்டிருப்பதாகவோ, பணிப்பாளர் திருப்திப்பட்டால், பணிப்பாளரால் அனுமதிப்பத்திரம் சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்ட அனுமதிப்பத்திரக் கட்டணத்தைப் போல மும்மடங்குக்கு மேற்படாத தொகையை மேலதிகக் கட்டணமாக மூன்று மாதத்திற்கு மேற்படாத காலத்திற்கு இடைநிறுத்தும் உத்தரவொன்றையோ அனுமதிப்பத்திரத்தை இரத்துச்செய்யும் உத்தரவொன்றையோ பிறப்பிக்க முடியும்.

பணிப்பாளருடைய தீர்மானத்திற்கான காரணத்தை விண்ணப்பதாரருக்கு அனுப்ப வேண்டியதாதல்.

16. (1) பணிப்பாளர் வீதிப் பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையனுமதிப்பத்திரம் வழங்கப்படுதல் புதுப்பித்தலை நிராகரித்தல் இல்லையேல் அனுமதிப்பத்திரம் சம்பந்தமாக 15 ஆம் வாசகத்தின் கீழ் உத்தரவுகளை பிறப்பித்தல் சம்பந்தமாக தீர்மானம் எடுக்கும் பட்சத்தில் பணிப்பாளர் தனது தீர்மானத்தையும் அதற்கான காரணிகளையும், சந்தர்ப்பசூழ்நிலைகளுக்கேற்றவாறு விண்ணப்பதாரருக்கோ அனுமதிப்பத்திரத்திற்குரியவருக்கோ எழுத்துமூலம் அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) கீழ் குறிப்பிட்ட பிரமாணங்களுக்கமைய, இந்நியதிச் சட்டத்தின் 15 ஆம் வாசகத்தின்கீழ் ஒரு அனுமதிப்பத்திரத்தைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கவோ, அல்லது ரத்துச் செய்யவோ, அல்லது அனுமதிப்பத்திரம் வழங்க மறுக்கவோ, அல்லது அனுமதிப்பத்திரத்தை மீளப்புதுப்பிக்க மறுக்கவோ கட்டளை பிறப்பிக்க பணிப்பாளருக்குத் தகுதியுண்டெனவும் அதாவது கட்டளை அல்லது தீர்மானம் பிறப்பிக்கப்பட்டு (பிறப்பிக்கப்பட்ட நாள் உற்பட) முப்பது நாட்கள் முடியவுறும் மறுநாள், இவ்வுப வாசகத்தின்படி "கட்டளையோ அல்லது தீர்மானமோ பதிவுத் தபாலில் அனுப்பப்பட்ட திகதி" கட்டளையோ தீர்மானமோ பிறப்பிக்கப்பட்ட திகதியாகக் கணிக்கப்படும் எனவும்.

மேன்முறையீடு.

17. (1) (i) அனுமதிப்பத்திரம் வழங்கவோ அல்லது புதுப்பிக்கவோ மறுக்கும் பட்சத்தில் ;

(ii) மேலதிகக் கட்டணம் செலுத்தவோ, இடை நிறுத்தியோ அல்லது ரத்து செய்தோ இருந்தால் மேற்படி தீர்மானம் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் மேற்படி தீர்மானத்துக்கோ அல்லது கட்டளைக்கோ எதிராக குறிப்பிட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளருக்கு எழுத்துமூலம் மேன்முறையீட்டை சமர்ப்பிக்கலாம்.

(2) இதன் (1) ஆம் உப வாசகத்தின்கீழ் தமக்கு அனுப்பப்பட்ட மேன்முறையீடு சம்பந்தமாக மத்திய மாகாண சபையின் போக்குவரத்துச் சேவை சம்பந்தமான விடயத்துக்கு பொறுப்பான அமைச்சின் செயலாளரினால் வழங்கப்படும் தீர்ப்பு சம்பந்தமாக விண்ணப்பதாரருக்கோ அனுமதிப்பத்திரத்திற்குரியவருக்கோ அறிவிப்பதோடு பணிப்பாளருக்கும் அறிவித்தல் அனுப்பவேண்டும்.

(3) இதன் (2) ஆம் உப வாசகத்தின்படி மாகாண அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட தீர்ப்பிலும் அதிருப்தியடையும் அனுமதிப்பத்திர விண்ணப்பதாரர் அல்லது அனுமதி பத்திரத்திற்குரியவர் மேற்படி தீர்ப்புக்கு எதிராக மேன்முறையீட்டை தீர்ப்பு தரப்பட்ட ஏழு நாட்களுக்குள் மத்திய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கு

அனுப்பலாம், அத்தோடு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அந்த மேன்முறையீடு சம்பந்தமாக எடுக்கும் தீர்ப்பினை மாகாணப் பணிப்பாளருக்கு மாகாண அமைச்சின் செயலாளருக்கு நகலுடன் சம்பந்தப்பட்டவருக்கு முறையீடு கிடைக்கப்பெற்று ஏழு நாட்களுக்குள் அனுப்புதல் வேண்டும்.

(4) இல. (3) உப வாசகத்தின்படி மத்திய போக்குவரத்து ஆணைக்குழுவுக்குக் கிடைத்த மேன் முறையீட்டை ;

(அ) குறிப்பிட்ட விடயத்துக்கேற்ப, மேன்முறையீட்டை ஏற்று அனுமதிப்பத்திரத்தை வழங்கவோ, புதுப்பிக்கவோ பணிப்பாளருக்கு அறிவிக்கலாம்.

(ஆ) மேன்முறையீட்டை ஏற்று மேலதிகக் கட்டணத்தையோ அனுமதிப்பத்திரத்தை ரத்துச் செய்ததையோ வாபஸ் பெறலாம்.

(இ) மேன்முறையீட்டை நிராகரிக்கலாம்.

(5) மேற்படி (3) ஆம் (4) ஆம் உபவாசகத்தின்படி மேன்முறையீட்டையிட்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு எடுக்கும் தீர்மானம் இறுதியும் முடிவானதுமாகும்.

(6) இப்படியான முறையீட்டையிட்டு தேசிய போக்குவரத்து ஆணைக்குழு எடுக்கும் தீர்மானத்தை மாகாண சபைக்குரிய அமைச்சின் செயலாளருக்கும் பணிப்பாளருக்கும் உடனடியாக அறிவிக்கப்பட வேண்டும்.

(7) மேற்படி (4) ஆம் உப வாசகத்தின்படி தேசிய போக்குவரத்து ஆணைக்குழு இடும் வழிகாட்டலை பணிப்பாளர் ஏற்று நடப்பார்.

அதேயிடத்து தண்டப் பணம்.

18. (1) பணிப்பாளரினால் அதிகாரம் வழங்கப்பட்ட எவரேனுமொரு அதிகாரியினாலோ பொலிசு அதிகாரியினாலோ இந்த நியதிச் சட்டத்தின்கீழ் பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையனுமதிப் பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் பிரயாணிகள் போக்குவரத்துக்காக ஓடவிடப்படுகின்ற பஸ் வண்டிக்குரிய இந்த நியதிச் சட்டத்தில் உள்ள உத்தரவு விதிகள் எவற்றையேனும் அத்து மீறியுள்ளதாக கண்டு பிடிக்கப்பட்டால் மேற்படி அத்துமீறல் சம்பந்தமாக பொறுப்பை ஏற்றுக்கொள்கின்ற எவரேனும் ஒருவரால், மேற்படி அத்துமீறல் சம்பந்தமாக வழக்கு தொடர்வதற்குப் பதிலாக ஐநூறு ரூபாய்க்கு மேற்படாத வகையில் மேற்படி அத்துமீறலை கண்டு பிடித்த அதிகாரியினால் விதிக்கப்படுகின்ற அதேயிடத்து தண்டனைப் பணம் செலுத்தப்பட வேண்டியுள்ளது. தண்டப்பணத்தை விதிக்கின்ற அதிகாரியினால் மேற்படி விதிக்கப்பட்ட உத்தரவு எழுத்துமூலம் ஒப்படைக்கப்பட வேண்டியுள்ளதோடு அதைப்பற்றி பொருத்தமான முறையில் குறித்த பஸ் வண்டியின் இலக்கத்துடன் பணிப்பாளருக்கு பற்றுச்சீட்டினை சமர்ப்பித்தல் வேண்டும்.

(2) இவ்வாறான தண்டப்பணத்தை விதிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் மத்திய மாகாண சபையின் போக்குவரத்துப் பணிப்பாளருக்கு அல்லது கிட்டிய பிரதேச செயலர்ளர் செயலகத்திற்கோ மத்திய மாகாண சபையின் ஒருங்கிணைந்த நிதியத்திற்கு வரவாகக் கூடியதாக செலுத்தி செலுத்தியமைக்கான சான்றான பற்றுச்சீட்டை பணிப்பாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

பத்திரத்தை பஸ்வண்டியின் முன்புற கண்ணாடியில் பார்வைக்கு வைக்க வேண்டியமை.

19. இந்த நியதிச்சட்டத்தின்கீழ் வழங்கப்படுகின்ற சகல பிரயாணிகள் போக்குவரத்து சேவையனு மதிப்பத்திரத்தோடு சம்பந்தப்பட்ட பார்வைக்கு வைப்பதற்கான அட்டையொன்று அனுமதிப்பத்திரமொன்று. அடையாளமொன்று மேற்படி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டதும் உரிய பஸ் வண்டியில் முன்புற கண்ணாடியில் தெளிவாகக் காணக்கூடிய வகையில் பார்வைக்கு வைத்தல் வேண்டும்.

மீளப்பெறும் தகவல்கள்.

20. இந்த நியதிச்சட்டத்தின்கீழ் தனக்கு தத்துவமளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தனது கடமைகளை நிறைவேற்றுவதன் நோக்கத்திற்காக பணிப்பாளருக்கு தேவைப்படுகின்ற சில தவணையறிக்கைகள், தகவல்கள், விளக்கங்கள் அறிவித்தல் சம்பந்தமாக செய்யப்படுகின்ற அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கால வரையறைக்குள் வழங்கும்படி அல்லது ஏதேனும் அறிக்கையொன்றோ வேறு ஆவணத்தையோ பாதுகாப்பாக வைக்க வேண்டும் என்பதற்கு இந்த நியதிச்சட்டத்தின்கீழ் பிரயாணிகள் போக்குவரத்து சேவையனுமதிப்பத்திரம் பெற்றிருப்பவருக்கு பணிப்பாளர் எழுத்துமூலம் அறிவித்தலொன்று வழங்க வேண்டியுள்ளதோடு அந்த அறிவித்தலிலுள்ள விதிகளை பின்பற்ற வேண்டியது அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவரின் பொறுப்பாகும்.

பஸ் நிறுத்தி வைப்பதற்காக பஸ் தரிப்பிடங்கள்.

21. (1) பஸ் வண்டிகளை நிறுத்தி வைப்பதற்காக மாகாண சபைப் பிரதேசத்தில் பஸ் நிறுத்திவைக்கும் வைப்பகங்களும் பஸ்தரித்துச் செல்லும் தரிப்பிடங்களும் அமைத்தல், அகற்றுதல், பராமரித்தல், விருத்தி செய்தல், பிறிதொருவகையில் மாற்றுதல், அவற்றில் பஸ் பிரயாணிகளுக்கும் பஸ் வண்டிகளுக்கும் சென்றுவரக்கூடிய வசதிகளை, சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி மன்ற நிறுவனங்களினாலும் பொருத்தமானதெனக் கருதும் வேறு முறைகளினாலும் ஏற்பாடு செய்வதற்கு தேவையான பொருத்தமான வழிமுறைகளையும் கட்டளையும் பிறப்பிப்பதற்கு பணிப்பாளருக்கு அதிகாரம் உண்டு.

(2) பஸ் வைப்பகத்திலிருந்தும், பஸ் தரிப்பிடங்களிலிருந்தும் பஸ் வண்டிகளை ஓடவிடும் கால அட்டவணை (நேரசூசி) குறித்து வைத்து அதன்படி பஸ் வண்டிகளை ஓட விடுவதை ஒழுங்கு முறைப்படி செய்தல், நேர சூசியை செயல்படுத்தல், முகாமைத்துவத்துக்காக ஈடுபடுத்தப்படுகின்ற பணியாளர் குழாமுக்கு தேவையான ஆலோசனைகளையும் உத்தரவுகளையும் பிறப்பித்தல், மேற்படி பணியாளர் குழாமினரை கண்காணித்து வழிநடத்தல் அதற்காக பொருத்தமான விதிமுறைகளை கையாளுதல் ஆகியவற்றுக்கான அதிகாரம் பணிப்பாளரையே சாரும்.

(3) பஸ்களை ஓடவிடுகின்ற நேர சூசியை, முகாமைத்துவம் செய்கின்ற பணியாளர் குழாமினரை சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்ப நியமனம் வழங்குதல், சேவையிலிருந்து நீக்குதல், உட்பட ஒழுங்கு முறையில் நிர்வாகம் செய்தல் அதிகாரங்கள் பணிப்பாளருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

*அமைச்சரின் அத்தாட்சி.*

22. பெரும்பாலும் பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையின் உயர்வுக்காக பொருத்தமான சந்தர்ப்பங்களில் பொது அரச கொள்கைகளுக்கு ஏற்புடையதாக பஸ் வண்டிகளை பராமரிப்பதற்காக தேவைப்படுகின்ற உதிரிப்பாகங்களை பெறுவதற்கும் வசதிகளையும், வரிச் சலுகையையும் பெறுவதற்குரிய பிரேரணைகளை மாகாண சபையின் அனுமதிக்காக போக்குவரத்து விடயத்துக்குப் பொறுப்பான மாகாண அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

*குற்றங்கள்.*

23. இந்த நியதிச்சட்டத்தின் விதிமுறைகள் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட கட்டளைகளின் விதிமுறைகளை மீறுகின்ற எவரேனுமொரு நபர் தானறிந்தும் உண்மையல்லாத, பிழையான தகவல்களை உள்ளடக்கி ஏதேனும் தவணையறிக்கைகளை எழுத்துமூல தகவல்களை எழுத்து மூலமான விடய விளங்கப்படுத்தல்களை சமர்ப்பித்த எவரேனுமொரு நபர் இந்த நியதிச்சட்டத்தின் கீழ் தண்டனை பெறக்கூடிய குற்றமொன்றை செய்ததாக கணிக்கப்படும்.

*நியதிச் சட்டங்களின் கீழ் கட்டளைகளை ஆக்குதல்.*

24. (1) ஏதேனுமொரு விடயம் சம்பந்தமாக திட்டவட்டமான உத்தரவு ஒன்றை பிறப்பிக்க வேண்டுமென இந்த நியதிச் சட்டத்தின் விதி முறைகளமைந்துள்ளவை பற்றியும் ஏதேனுமொரு விடயம் சம்பந்தமாக உத்தரவுகளை பிறப்பிக்கவும் இந்த நியதிச் சட்டத்தின்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளவை பற்றியும் அமைச்சரினால் கட்டளைகள் பிறப்பிக்கப்படும்.

(2) (1) ஆம் உப வாசகத்தினால் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் விரிவாக்கத்திற்கு பாதிப்பு ஏற்படா வண்ணம் அமைச்சரினால் குறிப்பாக பின்வரும் விடயங்களுக்கும் அவற்றோடு தொடர்புடைய காரணங்கள் சம்பந்தமாகவும் கட்டளைகளை ஆக்க இடமுண்டு :—

(i) இந்த நியதிச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையனுமதிப் பத்திரங்களை பெறுதல், புதுப்பித்தல் அல்லது மாற்றுதல் சம்பந்தமான பின்பற்றப்பட வேண்டிய செயலொழுங்கு முறைகள் பயன்படுத்த வேண்டிய படிவங்கள் செலுத்த வேண்டிய கட்டணங்கள் என்பவை ;

(ii) இந்த நியதிச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பிரயாணிகள் போக்குவரத்து சேவையனுமதிப் பத்திரத்தின்படி ஈடுபடுத்தப்படுகின்ற பஸ் வண்டியில் கொண்டு செல்ல வேண்டிய பெயர் பலகைகளும் சின்னங்களும் ;

(iii) இந்த நியதிச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பிரயாணிகள் போக்குவரத்து சேவையனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் ஈடுபடுத்தப்படும் பஸ் வண்டியில் ஓட்டுனரால் நடத்துனரால் கொண்டு செல்ல வேண்டியுள்ள ஆவணங்களும் அவற்றில் உள்ளாக்கப்பட வேண்டிய விபரங்களும் ;

(iv) இந்த நியதிச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பிரயாணிகள் போக்குவரத்து சேவையனுமதிப்பத்திரத்தின் அனுமதியின்கீழ் ஈடுபடுத்தப்படும் பஸ் வண்டியொன்றினை பயன்படுத்தும் எவரேனும் பின்பற்ற வேண்டிய வழக்க முறைகளும், வழக்க முறைகளை அத்துமீறும் செயல்களில் ஈடுபடுபவர்களை தடுத்தலும் ;

(v) இந்த நியதிச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பிரயாணிகள் போக்குவரத்து சேவையனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் ஈடுபடுத்தப்படும் பஸ் வண்டிகளில் பிரயாணத் தடவைகளில் எண்ணிக்கை சம்பந்தமாக வைத்துக்கொள்ள வேண்டிய பதிவுகள் ;

(vi) இந்த நியதிச்சட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட பிரயாணிகள் போக்குவரத்து சேவையனுமதிப் பத்திரத்திற்குரியவர்களால் அந்த அனுமதிப்பத்திரத்தின் அதிகாரத்தின்கீழ் பயன்படுத்தப்படுகின்ற பஸ் வண்டிகளில் ஓட்டுனர்களாக நடத்துனர்களாக சேவையிலீடுபடுத்தப்பட்டிருப்பவர்கள் சம்பந்தமாகவும் அவர்கள் சேவையை ஆரம்பிக்கின்ற - முடிக்கின்ற நேரத்தையும் அவர்களால் எடுக்கப்படுகின்ற ஓய்வு நேரம் சம்பந்தமாக அனுமதிப் பத்திரங்களுக்குரியவர்கள் வைத்திருக்க வேண்டிய அறிக்கைகள் ;

(vii) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் நடத்தப்பட்டு வருகின்ற அறிக்கைகளை பாதுகாப்பாக வைத்திருத்தல், கட்டளைகளில் குறிப்பிடப்படுகின்ற எவரேனுமொருவர் அதிகாரியினால் அந்த அறிக்கைகளை பார்வையிடுவதற்காக கேட்கப்படும் சந்தர்ப்பங்களில் அவ்வறிக்கைகளை பார்வைக்கு சமர்ப்பித்தல் ;

(viii) போக்குவரத்து சேவையனுமதிப்பத்திரத்திற்குரியவர்களும் பஸ் பிரயாணிகளின் பிரதேச சங்கங்கள், மாவட்ட சங்கங்கள், ஒருங்கிணைந்த மகா சங்கங்கள் பிரயாணிகள் போக்குவரத்துக்களோடு தொடர்புடைய பிரயாணிகள் சங்கம் சங்கங்கள் சம்பந்தமான விடயங்களை நடத்திச் செல்லும் நடவடிக்கை ஒழுங்கு முறைகளையும் அவற்றின் காரியங்களை நிறைவேற்றுதல் சம்பந்தமான ஒழுங்கு முறைகளையும் ;

(ix) பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையினை செயல்திறனோடு மேற்கொள்வதில் பஸ் பிரயாணியின் சங்கங்களும் பிரயாணிகள் போக்குவரத்து சேவையனுமதிப்பத்திரங்களுக்குரியவர்களுடைய சங்க வினவுதல்களையும் அவற்றின் பிரதிநிதித்துவத்தை சமர்ப்பித்தலும் ;

(x) குறிப்பாக பஸ் ஒட்டங்களை ஒருங்கிணைத்தல் நேரங்களை ஒழுங்குப்படுத்தல், நேரங்களை பதிவு செய்தல், வசதிகளை சரியான முறையிலும் நியாயமான முறையிலும் ஏற்பாடு செய்வதற்கு பஸ் நிறுத்தி வைக்குமிடங்களையும் பஸ் தரிப்பிடங்களையும் அமைத்தலும் முகாமைப்படுத்தலும் ;

(xi) இந்த நியதிச்சட்டத்தின்படி பிரயாணிகள் போக்குவரத்து சேவையனுமதிப்பத்திரங்களின் அதிகாரத்தின் கீழ் பயன்படுத்தப்படுகின்ற பஸ் வண்டிகளில் சேவையில் ஈடுபடுத்துகின்ற ஓட்டுனர்களுடைய நடத்துனர்களுடைய தகைமைகளை குறிப்பிடும்பொழுது அவர்களது தொழில்நுட்ப, உடலியல் தகைமைகளை அடிக்கடி பரிசோதனைக்கு உட்படுத்தல், பிரயாணிக்கோ பிரயாணிகளுக்கோ ஏதேனும் இழப்புகளுக்காக நஷ்டஈடு வழங்குதல் ;

(xii) மாகாண சபைப் பிரதேசத்தினுள்ளேயோ அதனுள் ஏதேனுமொரு வீதிப் பிரயாணிகள் போக்குவரத்துச் சேவை பாதகமான நிலைக்கு வீழ்ச்சியடையுமென்று தனக்கு தெரியவரும் அவசர சந்தர்ப்பங்களிலும் இடர்களேற்படும்போதும் எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் ;

(xiii) மாகாண சபைப் பிரதேசத்தினுள் இருக்கும் பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையை ஒழுங்குமுறைப்படுத்தல், செய்திறன்மிக்கதாக்குதல் புதிய சேவைகளை ஆரம்பித்தல் பஸ் பிரயாணிகளிடமிருந்தும் பிரயாணிகள் போக்குவரத்துச் - சேவையனுமதிப்பத்திரங்களுக் குரித்துடையவர்களிடமிருந்தும் பிரயாணிகள் போக்குவரத்துச் சேவைகளை நடத்திச்செல்ல உசிதமான நியாயமான, பொருளாதார சக்தியினை வழங்க வேண்டிய தேவையையும் கவனத்திற்கு எடுத்து, அந்தந்த வீதிகளில் ஓடவிடப்படுகின்ற பஸ்களின் எண்ணிக்கையை மட்டுப்படுத்தல் என்பன பிரதானமாகக் கொண்ட பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக தமக்கு ஆலோசனைகளையும் விதந்துரைகளையும் பெற்றுக்கொள்வதற்கு தேவைப்படுகின்ற ஆலோசனை சபைகளையோ குழுக்களையோ அமைத்துக்கொள்ளவும் அவற்றிற்குரிய உறுப்பினர்களை பெயரிடுதல் நியமித்தல் பொறுப்புக்களையும் அதிகாரங்களையும் தீர்மானித்தல் ;

(xiv) மாகாணங்களுக்கிடையிலான பிரயாணிகள் போக்குவரத்துச் சேவையனுமதிப்பத்திரங்களை வழங்க வேண்டிய சந்தர்ப்பங்களின்போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறையொழுங்குகள் ;

(3) இதன் (2) ஆம் உப வாசகத்தின் கீழ் ஆக்கப்பட்ட சகல கட்டளைகளும், அவற்றை வர்த்தமானியில் வெளியிடப்பட்டவுடன் அவ்வாறு வெளியிடப்பட்ட தினத்திலிருந்தோ கட்டளையில் குறிப்பிடப்படுகின்ற பிந்திய தினத்திலிருந்தோ அது அமுலாகுதல் வேண்டும்.

(4) இதன் (2) ஆம் உப வாசகத்தின் கீழ் ஆக்கப்படுகின்ற சகல கட்டளைகளும் அவை வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின்னர் உடனடியாக மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதாகவுள்ளதோடு அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அங்கீகரிக்கப்படாத ஏதேனும் கட்டளைகள் இருப்பின் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட செயல்களுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு அங்கீகரிக்கப்படாத தினத்திலிருந்து அக்கட்டளை செல்லுபடியற்றதாக கணிக்கப்படல் வேண்டும்.

(5) ஏதேனுமொரு கட்டளை அவ்வாறு செல்லுபடியற்றதாக கணிக்கப்படும் திகதி வர்த்தமானியில் வெளியிடப்படல் வேண்டும்.

ஆள் குழுக்களால் செய்யப்படுகின்ற குற்றங்கள் சம்பந்தமாக சில ஆட்கள் உள்ளாகின்றமை.

25. இந்த நியதிச்சட்டத்தின்கீழ் குற்றமொன்றை ஆட்களான குழுக்களால் செய்யப்பட்ட செய்யப்படும் சந்தர்ப்பத்தின்போது.

(i) அந்த ஆள் - குழுக்கள் ஸ்தாபனமாக இருக்குமானால், குற்றம் இழைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் அந்த ஸ்தாபனத்தின் பணிப்பாளருக்கு, பொது முகாமையாளருக்கு அல்லது அதே நிலையில் உள்ள வேறொரு அதிகாரியாக இருந்த எல்லோரும் ; அல்லது

(ii) அந்த ஆள் - குழு வர்த்தக நிறுவனமானால் குற்றமிழைக்கப்பட்டபோது அந்த வர்த்தக நிறு வனத்தின் பங்குதாரராக இருந்த எல்லா ஆட்களும்.

குற்றமிழைக்கப்பட்டது அவர் அறிந்தோ பங்களிப்போ இல்லாது இருந்தமையும் தனது கருமங்களின் தன்மையும் சகல சந்தர்ப்பங்களிலுண்டான காரணிகளை கவனத்தில் எடுத்து குற்றம் செய்வதை தடுப்பதற்காக அவரால் செயல்படுத்தக்கூடியதாக இருந்த சகல ஊக்குவிப்புகளையும் செயல் படுத்தியதாக அவர் நிரூபித்தாலன்றி, அவர் அந்தக் குற்றம் சம்பந்தமான குற்றவாளியாக கருதப்பட வேண்டும்.

இரத்துச் செய்தல்.

26. (1) இந்த நியதிச்சட்டம் வலுவுடையதாகும் திகதியிலிருந்து மத்திய மாகாண சபையின் 1990 இன் 20 ஆம் இலக்கம் கொண்ட "வீதிப் பிரயாணிகள் போக்குவரத்து நியதிச்சட்ட" படி எடுக்கப்பட்ட எந்தவொரு நடவடிக்கைக்கும் தலையீடுகள் ஏற்படாதவண்ணம் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது என்பதோடு அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிமுறைகள் மீண்டும் அறிவிக்கும்வரை இந்த நியதிச்சட்டத்தின்கீழ் பிறப்பிக்கப்பட்ட ஒழுங்குவிதி முறைகளாக கவனித்தல் வேண்டும் ;

(2) மேற்படி (1) ஆம் உப வாசகத்திற்கமைய, குறிப்பிட்ட 1990 இன் 20 ஆம் இலக்க "வீதிப் பிரயாணிகள் போக்குவரத்து நியதிச் சட்ட" த்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட கட்டளைகள் இந்நியதிச் சட்டத்தின்கீழ் ரத்துச்செய்யப்படாவிட்டாலோ புதிதாக புகுத்தப்படாமலோ இருக்கும் பட்சத்தில், அவை இந்நியதிச்சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டக் கட்டளைகளாகக் கருதப்படும்.

பொருள் கோடல்

27. இந்த நியதிச்சட்டத்தில் சொற்கள் சம்பந்தமாக வேறொரு அர்த்தம் தேவைப்பட்டாலொழிய, "உள்ளூராட்சி மன்றங்கள்" என்பது ஏதேனும் மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை என்று கருதப்படுவதோடு அதற்கு அத்தகைய ஏதேனுமொரு சபையினால் அமுலாக்கப்படுகின்ற, நிறைவேற்றப்படுகின்ற அதிகாரங்கள் காரியங்கள் காரியங்களை அமுலாக்கவும் நிறைவேற்றவும் ஏதேனுமொரு சட்டத்தினால் ஆக்கப்பட்டு அமைக்கப்பட்ட ஏதேனுமொரு அதிகார அமைப்பும் உள்ளடக்கப்படும்.

"இரட்டை தேவை வாகனம்" பிரயாணிகளையும் பொருட்களையும் எடுத்துச் செல்லும் வாகனமாகும்.

"வாடகை வாகன" என்பது வாடகை வாகனம் என பதிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனம்.

"அமைச்சர்" என்பவர் மாகாண சபையில் போக்குவரத்துக்குப் பொறுப்பாக அமைச்சர் சபையில் உள்ள அமைச்சர் என கருதப்படும்.

"பஸ் வண்டி" என்பது மோட்டார் போக்குவரத்து சட்டத்தின்கீழ் பஸ் வண்டி என பதிவு செய்யப்பட்ட மோட்டார் வாகனம் இதற்குள் இரட்டைத்தேவை வாகனமும் அடங்கும்.

"பிரயாணி" என்பவர் வாடகை வாகனத்தின் பிரயாணம் செய்பவர், சாரதியைத் தவிர - பஸ் வண்டியாயின் சாரதியையும் நடத்துனரையும் தவிர.

"அங்கீகரிக்கப்பட்ட" இந்த நியதிச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட கட்டணங்களின்படி அங்கீகரிக்கப்பட்ட என்ற கருத்தாகும்.

"மாகாணம்" என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மத்திய மாகாணமாகும்.

"மாகாண சபை" என்பது மத்திய மாகாண சபையாகும்.

"பிரத்தியேகக் கட்டணம்" என்பது பஸ் வண்டியில் பிரயாணம் செய்வதற்கு உரிமையளிக்கப் படுவதற்காக அறவிடப்படும், க்ட்டணமாகும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

28. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

05 - 279

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.